UNDER SECTION 173 BNSS
BNSS பிரிவு 173 ன் கீழ்

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167246

04/AC/2026

1. District : மாவட்டம் கரூர் | PS: காவல்நிலையம் பண. தடு. பிரிவு | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள் 18.07.2026

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION | Sections பிரிவுகள்: 7, 7A/N 12
(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED IN | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 AND BNSS 2023 | Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 17.07.2026 | Date to : நாள் வரை 17.00 HRS TO 23.45 HRS.
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.2026 | Time : நேரம் 16.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.07.2026 | Time : நேரம் 16.30 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியின் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5.கி.மீ வடக்கு

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம் கரூர். கரூர் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. தமிழ்செல்வி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. கதிரேசன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1991 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கிராம உதவியாளர். | (g) Address : முகவரி தொழிலாளர் உதவி ஆணையர் [அலுவலகம்] அலுவலகம். வெண்ணைமலை. கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

எழுதுகளின் மேலும் தகவலில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாள்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. சண்முகமணி Rank ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS. உ.த.க.முரசு ... இரு சி. ..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
18/07/26

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
18/07/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.07.2026 AT 17.30 HRS.

Name: பெயர் P. சண்முகமணி
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .....
உ.த.க.முரசு . இரு சி .

Attachment to Column 7 of FIR in Karur V&AC Cr.No.04/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS 2023.

S.No	Name and deatails of the accused
1	Tr.M.Shanmuga Prakasam, Age 49/26, Tahsildar, Karur Taluk Office, Karur District.
2.	Tr.S.Murugesan, Age59/26, Deputy Inspector of Survey, Karur Taluk Office, Karur District.
3.	Tmt.M.Lavanya, Age38/26, Land Records Draughtsman, Land Records Section, Karur Taluk & District.
4.	Tr.V.Gopal, Age 52/26, Field Surveyor, Thoranakkalpatti Firka, Karur Taluk & District.
5.	Tmt.R.Sumathi, Age 56/26, Deputy Tahsildar / Taluk Supply Officer, Karur Taluk & District.
6.	Tr.C.Sivamalar, Age 51/26, Salesmen, Fair Price Shop No.7, Vengamedu, Karur Taluk & District.
7.	Tr.Jayashankar, Age 47/26, S/o Jayaraman, D.No.1/150, Vaithiya Nagar, Lalapet, Krishnarayapuram Taluk, Karur District.
8.	Tr.M.Shivadev, Age 53/26, S/o Marappan, D.No.1/357B, Koraikkadu Punjaikadambankurichi, Manmangalam Taluk, Karur District.
9.	Tr.B.Ramalingam, Age 36/26, S/o Tr.Balusamy, D.No.109, Nadupalayam, Emur Post, Karur Taluk & District.
10.	Tr.V.Soundararajan, Age 43/26, S/o Tr.Vairaperumal, D.No.17A, Kundumachan Patti, Thanthonimalai, Karur Taluk & District.
11.	Tr.S.Ramesh Age 40/26, S/o Tr,Selvaraj, D.No.44/3, Sellipalayam, Thanthonimalai, Karur Taluk & District.
12.	Tr.V.Subramani Age 57/26, S/o Tr.Vellaisamy, D.No.31, K.V.B Nagar, LNS Village, Karur Taluk & District.
13.	Tr.A.Senthamilselvan, Age 37/26, S/o Tr.Arumugam, D.No.187/1, Karpaga Nagar, Emur Post, Karur Taluk & District.

(P.Thangmani)
Inspector of Police,
V&AC, Karur.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.04/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS 2023.

பணிந்து **சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் மாவட்டம், கரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர், மண்டல துணைவட்டாட்சியர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் தனிப்பட்டா, கூட்டு பட்டா, வாரிசு சான்றிதழ், OBC சான்றிதழ், விதவை சான்றிதழ், ஒருங்கிணைந்த சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்டோர் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்கள் உட்பட 25 வகையான சான்றிதழ்கள் வழங்கும்படி கேட்டு பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து சான்றிதழ் வழங்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் துணைவட்டாட்சியர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தமிழக அரசால் வழங்கப்படும் புதிய குடும்ப அட்டை வழங்குதல், பெயர் நீக்கம் மற்றும் பெயர் சேர்த்தல் ஆகிய காரணங்களுக்காக பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து குடும்ப அட்டை வழங்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும் கரூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள புதிய கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிவரும் நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் மற்றும் அவரது அலுவலக பணியாளர்கள் நிலஅளவை சம்மந்தமாக ஆன்லைன் மூலம் மற்றும் நேரடியாக பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து நில அளவை செய்து வரைபடம் அலுவலக கோப்பு தயார் செய்து வட்டாட்சியரின் ஒப்புதலுக்கு அனுப்பி உத்தரவு வழங்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும் அதே கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிவரும் தனி வட்டாட்சியர் (முத்திரை கட்டணம்) மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் கரூர் வட்டாட்சியர் அலுவலக எல்லைக்குள் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்களில் குறைவு முத்திரைத்தீர்வை கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்படும் சொத்து ஆவணங்கள் மீது உரிய முத்திரை கட்டணம் நிர்ணயம் செய்து அறிக்கை அனுப்பும்படி பெறப்படும் நிலுவை ஆவணங்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவண உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும், இ-சேவை மையத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வரும் பொதுமக்களிடம் விண்ணப்ப கட்டணத்திற்கு மேல் தொகை லஞ்சமாக பெறுவதாக நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 17.07.2026 ஆம் தேதி 17.15 மணிமுதல் 23.45 மணி வரை நடத்திய திடீர் இணை ஆய்வின் அடிப்படையில் திருமதி.G.தமிழ்செல்வி, இளநிலை உதவியாளர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்)அலுவலகம், வெண்ணெய்மலை, கரூர் மாவட்டம் 18.07.2026 ஆம் தேதி மாலை

16.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களிடம் தக்க அறிவுரை பெற்ற பின்னர், இன்று 18.07.2026 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/AC/2026 பிரிவு 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 மற்றும் பிரிவு 106 of BNSS, 2023-ன் கீழ் முதல் தகவல் அறிக்கையில் காலம் 7-ல் கண்ட எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திருமதி.G.தமிழ்செல்வி, இளநிலை உதவியாளர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம், வெண்ணெய்மலை, கரூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 17.07.2026-ம் தேதியன்று கரூர் வட்டாட்சியர் அலுவலக வளாக - வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் தனி வட்டாட்சியர் அலுவலகம், நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் அலுவலகம், தனி வட்டாட்சியர் (முத்திரை கட்டணம்) மற்றும் வட்டாட்சியர் அலுவலக வளாக இ-சேவை மையத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்ட போது கைப்பற்றிய பணம் ரூ.1,18,130/- மற்றும் ஆவணத்தை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை : திடீர் இணை ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 17.07.2026. இன்று 17.07.2026-ம் தேதியன்று நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்கள் என்னிடம் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள அரசு சாட்சி தேவைப்படுவதாகவும் அதற்காக என்னை கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்துக்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் மாலை 16.00 மணியளவில் கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு நேரில் வந்து அறிக்கை செய்தேன். அப்போது செல்வி.M.கீர்த்தனா, உதவியாளர், மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கரூர் மாவட்டம் என்பவரும் அதே அலுவலுக்காக அறிக்கை செய்தார். அப்போது தாங்கள் கரூர் மாவட்டம், கரூர் வட்டாட்சியர் அலுவலக தரைத்தளத்தில் இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர், மண்டல துணைவட்டாட்சியர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் தனிப்பட்டா, கூட்டு பட்டா, வாரிசு சான்றிதழ், OBC சான்றிதழ், விதவை சான்றிதழ், ஒருங்கிணைந்த சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்டோர் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்கள் உட்பட 25 வகையான சான்றிதழ்கள் வழங்கும்படி கேட்டு பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து சான்றிதழ் வழங்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும், கரூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வட்ட வழங்கல் தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் துணை வட்டாட்சியர்

மற்றும் அலுவலக பணியாளர்கள் தமிழக அரசால் வழங்கப்படும் புதிய குடும்ப அட்டை வழங்குதல், பெயர் நீக்கம் மற்றும் பெயர் சேர்த்தல் ஆகிய காரணங்களுக்காக பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து குடும்ப அட்டை வழங்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும் கரூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள புதிய கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிவரும் நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் மற்றும் அவரது அலுவலக பணியாளர்கள் நிலஅளவை சம்மந்தமாக ஆன்லைன் மூலம் மற்றும் நேரடியாக பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து நில அளவை செய்து வரைபடம் அலுவலக கோப்பு தயார் செய்து வட்டாட்சியரின் ஒப்புதலுக்கு அனுப்பி உத்தரவு வழங்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும் அதே கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிவரும் தனி வட்டாட்சியர் (முத்திரை கட்டணம்) மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் கரூர் வட்டாட்சியர் அலுவலக எல்லைக்குள் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்களில் குறைவு முத்திரைத்தீர்வை கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்படும் சொத்து ஆவணங்கள் மீது உரிய முத்திரை கட்டணம் நிர்ணயம் செய்து அறிக்கை அனுப்பும்படி பெறப்படும் நிலுவை ஆவணங்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவண உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும், இ-சேவை மையத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வரும் பொதுமக்களிடம் விண்ணப்ப கட்டணத்திற்கு மேல் தொகை லஞ்சமாக பெறுவதாக நம்பத்தகுந்த தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளும்போது அரசுதரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு சொன்னதன் பேரில் தங்கள் காவல் குழுவினருடன் நானும் இணைந்து மாலை சுமார் 16.15 மணியளவில் நிலையம் விட்டுப் புறப்பட்டு சுமார் 16.30 மணிக்கு கரூர் டவுன் ஜவஹர் பஜார் சாலையில் உள்ள தீயணைப்பு நிலையம் அருகே உள்ள வட்டாட்சயிர் அலுவலக வளாகத்தில் ஆங்காங்கே மறைவாக நின்று கண்காணித்தபோது வெளி நபர்கள் மற்றும் புரோக்கர்களின் நடமாட்டம் அதிகமாக தெரிந்தது. எனவே மாலை சுமார் 17.00 மணிக்கு காவல் ஆய்வாளர், மேற்படி அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினருடன் கரூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தரைதளத்தில் இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் நுழைந்து காவல் ஆய்வாளர், காவல் குழுவினருக்கு தக்க அறிவுரை கொடுத்து அவர்களை மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு காவல் ஆய்வாளரும், தலைமை காவலர்கள் 2557 திரு.ராமமூரத்தி மற்றும் 1619 திரு.லோகநாதன் ஆகியோர்களையும், வட்ட வழங்கல் தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவிச்சந்திரன் மற்றும் தலைமை காவலர் 701 திரு.சபரீசன் ஆகியோர்களையும், நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் அலுவலகத்திற்கு தலைமை காவலர்கள் 303 திரு.ஷபி அஹமத் மற்றும் 1627

திரு.பிரபாகரன் ஆகியோர்களையும், தனிவட்டாட்சியர் (முத்திரை கட்டணம்) அலுவலகத்திற்கு தலைமை காவலர் 407 திரு.கோபால் அவர்களையும் மற்றும் இ-சேவை மையத்திற்கு தலைமை காவலர் 1775 திரு.துரைராஜ் அவர்களையும் சென்று மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கண்காணிக்கும்படி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டது. அதன்பேரில் காவல் குழுவினர் அனைவரும் மேற்படி அலுவலகங்களுக்கு சென்று கண்காணித்து கொண்டிருந்தனர். அதன்பிறகு கரூர் வட்டாட்சியர் அலுவலக ஹாலுக்கு வந்து வட்டாட்சியர் திரு.சண்முக பிரகாசம் அவர்களிடம் அறிமுகம் செய்து கொணடு திடீர் ஆய்வு மாலை 17.15 மணிக்கு தொடங்கப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் போது, அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களும் அவர்கள் வைத்திருந்த தொகையும் பின்வருமாறு.

1.	திரு.M.சண்முக பிரகாசம், வட்டாட்சியர்	100/-
2.	திரு.R.கண்ணன், அலுவலக உதவியாளர்	120/-
3.	திரு.M.N.சங்கர், சார்ஆய்வாளர்	170/-
4.	திரு.ஆறுமுகம், VAO, ஏமூர் கிராமம்	250/-
5.	திரு.L.S.ராஜேஷ், வட்டாசியரின் ஓட்டுநர்	90/-
6.	திரு.பெருமாள், தட்டச்சர்	270/-
7.	திரு.M.கணேசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்	250/-
8.	திரு.S.பரணீதரன், இளநிலை வருவாய் ஆய்வாளர்	150/-
9.	திருமதி.கமலம், முதுநிலை வருவாய் ஆய்வாளர்	100/-
10.	திருமதி.நிரஞ்சனா தேவி, வருவாய் ஆய்வாளர்	220/-
11.	திரு.M.லோகேஷ் ஹரிராம், EPIC ஆப்ரேட்டர்	110/-
12.	திருமதி.S.ரேவதி, பதிவறை எழுத்தர்	130/-
13.	திரு.அஜய், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர்	150/-
14.	திருமதி.T.பூர்ணிமா, கிராம நிர்வாக அலுவலர்	300/-
15	திரு.S.தண்டபாணி, கிராம உதவியாளர்	170/-
16	திருமதி.A.S.சத்தியா, வருவாய் ஆய்வாளர்	200/-
17	திருமதி.P.தீபா, கிராம உதவியாளர்	150/-

மேற்படி வட்டாட்சியர் அலுவலக பணியாளர்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்த மேற்படி வருவாய் அலுவலர்கள் வைத்திருந்த தொகைகள் அவர்கள் சொந்த பணம் என்றும் செலவுக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்ததால் அவர்கள் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும், இந்த சோதனையின் போது அலுவலகத்திலிருந்த வட்டாட்சியர் திரு.M.சண்முக பிரகாசம் அவர்களை விசாரித்தபோது அவர் தான் கரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து கடந்த 03.07.2026 அன்று தான் கரூர் வட்டாட்சியராக பணியேற்பு செய்து கொண்டதாக தெரிவித்தார். அப்போது அவரது அறைக்கு வெளியே ஹாலில் அவரை சந்திப்பதற்காக காத்திருந்த கீழ்கண்ட நபர்களை சோதனை செய்ததில் அவர்களிடம் காணப்பட்ட தொகைகள் பின்வருமாறு.

1.	திரு.M.சிவதேவ், த/பெ.மாரப்பன், கோரைக்காடு, புஞ்சை கடம்பக்குறிச்சி, மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம்.	47,500/- 980/-	பேண்ட் முன்பக்க பாக்கெட் மணி பர்ஸ்	தனது மாமியார் திருமதி.ராமாயி அவர்களின் வாரிசு சான்றிதழ் கேட்டு கடந்த 10.07.2026 அன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பித்ததாகவும், அது சம்மந்தமாக வட்டாட்சியரை நேரில் சந்திக்க பணத்துடன் வந்ததாகவும், அவர் தனக்கு ஏற்கனவே பழக்கம் என்றும் சொன்னார். மேலும் ரூ.980/- அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னார்.
2.	திரு.B.ராமலிங்கம், த/பெ.பாலுசாமி, 105, நடுப்பாளையம், ஏமூர் அஞ்சல், கரூர் மாவட்டம்.	12,500/-	பேண்ட் முன்பக்க பாக்கெட்	திரு.நடேசன் என்பவருக்காக தான் 15 நாட்களுக்கு முன்பு அடங்கல் நகல் கேட்டு விண்ணப்பித்தாகவும், அதனை தற்போது வாங்குவதற்காக வட்டாட்சியர் அலுவலக உதவியாளர் திரு.கண்ணன் என்பவரை சந்திக்க பணத்துடன் வந்ததாகவும் சொன்னார்.
3.	திரு.V.சௌந்தரராஜன், த/பெ.வைரப்பெருமாள், 17A, வெங்கக்கல்பட்டி, தாந்தோணிமலை, கரூர் மாவட்டம்.	13,000/-	சட்டையின் மேல் பாக்கெட்	தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், தானும், தனது நண்பர் திரு.ரமேஷ் அவர்களும் உப்பிடமங்கலத்தை சார்ந்த தனது மற்றொரு நண்பரான திரு.வெங்கடாசலம் என்பவரின் மனைநிலத்தில் பரப்பளவு வித்தியாசம் உள்ளதால் அது சம்மந்தமாக வட்டாட்சியரை சந்திப்பதற்காக வந்ததாகவும் தெரிவித்தார்.
4.	திரு.S.ரமேஷ், த/பெ.செல்வராஜ், 54/3,செல்லிபாளையம், கத்தாளப்பட்டி அஞ்சல், கரூர் மாவட்டம்.	5000/-	சட்டையின் மேல் பாக்கெட்	விவசாயம் செய்து வருவதாகவும், மேற்படி அதே காரணத்திற்காக தனது நண்பர் திரு.சௌந்தரராஜன் உடன் வட்டாட்சியரை சந்திப்பதற்காக வந்ததாகவும் தெரிவித்தார்.
	மொத்தம்	78000/-		

மேற்படி சோதனையின் போது வட்டாட்சியரை சந்திக்க வந்த நபர்கள் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்பதாலும். முன்னுக்கு பின் முரணாக இருந்ததாலும் மேற்படி திரு.M.சிவதேவ், த/பெ.மாரப்பன் என்பவர் வைத்திருந்த சொந்த தொகை ரூ.980/- தவிர மற்ற நபர்கள் வைத்திருந்த தொகை மொத்தம் ரூ.78,000/-ஐ கைப்பற்றினேன். மேலும், இது தொடர்பாக மேற்படி நான்கு நபர்களிடமும் தனித்தனியாக வாக்குமூலம் பெறப்பட்டது.

மேற்படி வரிசை எண்கள் 1 மற்றும் 2-ல் உள்ள நபர்கள் சமர்பித்த ஆவணங்களைப்பற்றி வட்டாட்சியர் திரு.சண்முக பிரகாஷம் அவர்களிடம் கேட்டபோது அவர் மேற்படி நபர்களின் விண்ணப்பங்களை நகல் எடுத்தும் மற்றும் அலுவலக கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்தும் கொடுத்தை கைப்பற்றினேன்.

அதன்பிறகு மாலை சுமார் 19.00 மணிக்கு வட்டாட்சியர் அலுவலக கட்டிடடத்தின் கிழக்கு பக்கம் அமைந்துள்ள கரூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்திற்கு சென்று துணை வட்டாட்சியர் / வட்ட வழங்கல் அலுவலர் திருமதி.சுமதி அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு மாலை 19.15 மணிக்கு திடீர் ஆய்வு தொடங்கப்பட்டது. துணை வட்டாட்சியர் திருமதி.சுமதி அவர்களது இருக்கைக்கு வலது புறம் நின்றுகொண்டிருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.C.சிவமலர், த/பெ.R.சின்னதம்பி என்றும் தான் கரூர் வட்ட வழங்கல் எல்லைக்குட்பட்ட வெங்கமேட்டில் உள்ள கடை எண்.7 ல் விற்பனையாளராக பணிபுரிவதாகவும் துணை வட்டாட்சியர் திருமதி.சுமதி அவர்கள் தன்னை இன்று மாலை அலுவலகம் வந்து அவரை சந்திக்கும்படி தெரிவித்ததன் பேரில் தான் அவரை சந்திக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபேது அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.30,540/- பற்றி கேட்டபோது, அவர் முன்னுக்குபின் முரணாக சொன்னதால் மேற்படி தொகை ரூ.30,540/-த்தை அரசு சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். அவரை விசாரித்து வாக்குமூலம் தனியாக பதிவு செய்யப்பட்டது. மேலும் இந்த சோதனையின் போது, அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களை சோதனை செய்ததில், அவர்கள் வைத்திருந்த தொகைகள் பின்வருமாறு.

1.	திருமதி.R.சுமதி, துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலர்	500/-
2.	திரு.S.மதிவாணன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட வழங்கல் அலுவலர்	300/-
3.	திரு.S.செந்தில் முருகன், இளநிலை வருவாய் உதவியாளர்	380/-

மேற்படி அலுவலர்கள் வைத்திருந்த தொகைகள் அவரது சொந்த பணம் என்றும் செலவுக்காக வைத்திருந்ததாகவும் சொன்னதால் மேற்படி தொகைகளை அலுவலர்கள் வசமே திருப்பி ஒப்படைத்தேன். மேலும், மேற்படி துணை வட்டாட்சியர் திருமதி.சுமதி அவர்களிடம் கரூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள குடும்ப அட்டை பற்றி கேட்டபோது அவர் ஜனவரி 2026 முதல் 17.07.2026 வரை 1226 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 62 விண்ணப்பங்கள் குடும்ப அட்டை வழங்க பரிந்துரை செய்யப்பட்டதாகவும், 56 விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 1108 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதாகவும், 350 குடும்ப அட்டைகள் பிரிண்ட் செய்யப்பட்டு வழங்கப்படாமல் நிலுவையில் வைத்திருப்பதாகவும்

தெரிவித்து அலுவலக கணினியில் இருந்து மேற்கண்ட விபரங்களை பிரிண்ட் எடுத்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

அதன்பிறகு இரவு சுமார் 20.00 மணிக்கு வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் தெற்கு பக்கம் அமைந்துள்ள கரூர் வட்டாட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிவரும் வட்ட துணை ஆய்வாளர் திரு.முருகேசன், அவர்களிடம் அறிமுகப்படுத்தி கொண்டு இரவு 20.15 மணிக்கு திடீர் சோதனை தொடங்கப்பட்டது. அப்போது அலுவலகம் வந்த திரு.கோபால், நில அளவர் அவர்களை சோதனை செய்தபோது அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.5000/- பற்றி கேட்டபோது, அந்த பணம் இன்று மாலை DBS ATM-க்கு சென்று தனது வங்கி கணக்கில் இருந்து தனது மாருதி 800 காருக்கு டயர் மாற்றுவதற்காக ரூ.6000/- பணத்தை இன்று மாலை 04.10 மணிக்கு எடுத்து அதில் ரூ.1000/- செலவு செய்தது போக மீதி ரூ.5000/-த்தை தனது அக்கா மகன் திரு.கேசவன் என்பவருக்கு கொடுப்பதற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். உடனே இது பற்றி கேசவன் என்பவரின் கைப்பேசி எண். 9047780688 க்கு தொடர்பு கொண்டு இது சம்மந்தமாக விசாரித்தபோது அவர் ஏற்கனவே டயர் மாற்றுவதற்காக பணம் ரூ.6000/-த்தை நேற்றே அவருக்கு கொடுத்துவிட்டதாக தெரிவித்ததால் மேற்படி தொகை ரூ.5,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், அவர் வைத்திருந்த மேற்படி DBS ATM Slip-யை நகல் எடுத்து அதையும் விசாரணைக்காக கைப்பற்றினேன். ஆவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. மேலும் இந்த சோதனையின் போது, அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களை சோதனை செய்ததில், அவர்கள் வைத்திருந்த தொகைகள் பின்வருமாறு.

1.	திரு.முருகேசன், வட்ட துணை ஆய்வாளர்	10/-
2.	திரு.சேதுபதி, புல உதவியாளர்	500/-
3.	திருமதி.ரஞ்சனி, முதுநிலை வரைவாளர்	0
4.	திருமதி.சந்தியா, குறுவட்ட அளவர்	500/-
5.	திருமதி.லாவண்யா, வட்ட ஆவண வரைவாளர்	500/-

மேற்படி அலுவலர்கள் அலுவலர்கள் வைத்திருந்த தொகைகள் அவரது சொந்த பணம் என்றும் செலவுக்காக வைத்திருந்ததாகவும் சொன்னதால் மேற்படி தொகைகளை அலுவலர்கள் வசமே திருப்பி ஒப்படைத்தேன். அதன் பிறகு, மேற்படி அலுவலர்களின் கைப்பேசியை வாங்கி அவர்களது போன் பே மற்றும் ஜி பே ஆகியவற்றில் உள்ள பணப்பரிவர்த்தணைகளை சோதனை செய்த போது அதில் திரு.முருகேசன், வட்ட துணை ஆய்வாளர் மற்றும் திருமதி.லாவண்யா, வட்ட ஆவண வரைவாளர் ஆகிய இருவருடைய ஜி பே-ல் சந்தேகத்திடமான வகையில் பல்வேறு நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் முறையே ரூ.2,72,300/- கைப்பேசி எண்.8925636494 மூலமும் மற்றும் ரூ.1,24,900/- கைப்பேசி

எண்.9787545365 மூலமும் பணத்தை அவர்களது வங்கி கணக்கு மூலம் பெற்றிருப்பது தெரியுவந்தது. இது பற்றி அவர்களை விசாரித்தபோது, அவர்கள் இருவரும் கரூர் வட்ட நில அளவை பிரிவில் பணிபுரியும் பல உதவியாளர், ஆவண வரைவாளர், நிலஅளவர் ஆகியோர்கள் அவ்வப்போது தங்களது செலவிற்காக பணம் கொடுத்து வந்ததாக தெரிவித்தார்கள். அவர்கள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. அதன்பிறகு, மேற்படி வட்ட துணை ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்களிடம் கரூர் வட்ட நில அளவை பிரிவு அலுவலகத்தில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் பற்றி கேட்டபோது அவர் தற்போது வரை 416 விண்ணப்பங்கள் நேரடியாக பெறப்பட்டும், 231 விண்ணப்பங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு நடவடிக்கை எடுக்காமல் நிலுவையில் உள்ளதாகவும் மற்றும் 80 நத்தம் பட்டா விண்ணப்பங்கள், ஊரக பகுதி 120, நத்தம் பகுதி 42 விண்ணப்பங்கள் எல்லை அளந்து அத்து காட்டுவதற்காக பெறப்பட்டு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து அலுவலக கணினியில் இருந்து மேற்கண்ட விபரங்களை பிரிண்ட் எடுத்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

அதன்பிறகு இரவு சுமார் 21.30 மணிக்கு மேற்படி நில அளவை பிரிவிற்கு எதிர் திசையில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள தனிவட்டாட்சியர் (முத்திரை கட்டணம்) அலுவலகத்திற்கு சென்று அறிமுகப்படுத்தி கொண்டு இரவு 21.45 மணிக்கு திடீர் சோதனை தொடங்கப்பட்டது. அந்த அலுவலகத்திலிருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் திரு.ஜெய்சங்கர், த/பெ.ஜெயராமன் என்றும், தான் வைத்யா நகர் லாலாபேட்டையில் வசித்து வருவதாகவும் கரூர் வட்ட முத்திரை கட்டணம் தனிவட்டாட்சியராக திரு.விஜயகுமார் என்பவர் கடந்த 4 மாதங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இன்று அவர் களப்பணிக்கு சென்றுவிட்டு அலுவலகம் வரவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், அவர் தான் இந்த அலுவலகத்தில் கடந்த 15 வருடங்களாக பணிபுரிந்த முத்திரை கட்டண தனிவட்டாட்சியர்கள் தன்னை அவர்களது அலுவலக வேலைக்கு உதவியாக வைத்துக்கொண்டதாகவும், தான் அலுவலக கோப்புகளை கையாள்வது, அஞ்சல் அலுவலகம் செல்வது, நோட்டீஸ் எழுதுவது, தனி வட்டாட்சியருடன் களஆய்வு பணிக்கு செல்வது மற்றும் அவர்கள் சொல்லும் அனைத்து பணிகளையும் செய்து வருவதாகவும், அதற்காக அவர்கள் 15 வருடத்திற்கு முன்பு இருந்து தனக்கு ரூ.2000/- முதல் மாத சம்பளமாக கொடுத்து வந்தார்கள் என்றும், படிப்படியாக மாத சம்பளத்தை உயர்த்தி தற்போது ரூ.10,000/- தனக்கு கொடுத்து வருவதாகவும் முத்திரை கட்டணம் தனிவட்டாட்சியர் திரு.விஜயகுமார் அவர்களும் அவர் பணிக்கு சேர்ந்தது முதல் கடந்த நான்கு மாதங்களாக ஒவ்வொரு மாதமும் ரூ.10,000/- சம்பளமாக கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், அவர் தான் தினந்தோறும் தனது இருசக்கர வாகனத்தில் காலை அலுவலகம் வந்து தனிவட்டாட்சியர் (முத்திரை கட்டணம்) அவர்கள் அலுவலகத்தை

திறந்து அன்றாட அலுவல்களை கவனித்து வருவதாகவும், அலுவலகத்திற்கு தன்னிடம் மற்றும் தனிவட்டாட்சியரிடம் தனித்தனியாக இரண்டு சாவிகள் உள்ளது என்றும், அலுவலகத்தை பூட்டிவிட்டு சாவியை தான் எடுத்து சென்றுவிடுவதாக சொன்னார். அவரிடம் அலுவலகத்தில் தற்போது நிலுவையில் உள்ள கோப்புகளை பற்றி கேட்டபோது அவர் 20 கோப்புகள் நடவடிக்கை எடுக்காமல் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன் பிறகு, மேற்படி தனிநபர் திரு.ஜெய்சங்கர், த/பெ.ஜெயராமன் என்பவரின் கைப்பேசியை வாங்கி அவரது ஜி பே-ல் உள்ள பணப்பரிவர்த்தணைகளை சோதனை செய்த போது அதில் அவரது ஜி பே-ல் சந்தேகத்திடமான வகையில் பல்வேறு நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.24,41,754/- பணம் அவரது வங்கி கணக்கு மூலம் பெற்றிருப்பது தெரியவந்தது. இது பற்றி அவரிடம் விசாரித்தபோது, அவர் தான் கடந்த 2019 முதல் தனது கைப்பேசி எண்.9965236136-ல் ஜி பே பயன்படுத்தி வருவதாகவும், அப்போதிருந்தே முத்திரை கட்டண தனிவட்டாட்சியர்கள் சொல்லும் நபர்கள் தனக்கு ஜி பே மூலம் அனுப்பிய மேற்படி மொத்த தொகை ரூ.24,41,754/- த்தை பெற்று அந்த பணத்தை முத்திரை கட்டண தனிவட்டாட்சியர்கள் கேட்கும்போது வங்கி கணக்கில் இருந்து எடுத்து கொடுத்து விடுவாகவும், மேலும் அவர்கள் சொல்லும் நபர்களுக்கு ஜிபே மூலம் அனுப்பி வருவதாகவும் தெரிவித்தார். அவரை விசாரித்தது அவரிடம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது.

அதன்பிறகு இரவு சுமார் 23.00 மணிக்கு மேற்படி கரூர் வட்டாட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தின் தரைத்தளத்தில் வட மேற்கு மூலையில் கிழக்கு பார்த்தவாறு இயங்கிவரும் இ-சேவை மைய அலுவலகத்திற்கு சென்று அறிமுகப்படுத்தி கொண்டு இரவு 23.15 மணிக்கு திடீர் சோதனை தொடங்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்திலிருந்த திரு.செந்தமிழ்செல்வன், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் என்பவரிடம் 17.07.2026 அன்று ஆன்லைண் மூலம் பதிவேற்றம் செய்து விண்ணப்பங்களைப்பற்றி கேட்டபோது அவர் அன்று 12 விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்து கொடுத்ததாகவும், அதற்கு விண்ணப்ப கட்டணமாக ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.60/- வீதம் 10 விண்ணப்பங்களுக்கு மொத்தம் ரூ.600/-ம் மற்ற இரண்டு விண்ணப்பங்களுக்கு தலா ரூ.10/- வீதம் மொத்தம் ரூ.20/-ம் ஆகமொத்தம் ரூ.620/-ம் வசூல் செய்ததாக தெரிவித்து அந்த தொகையை தனது டேபிள் டிராயரிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு கணக்கில் செலுத்தும்படி கேட்டுக்கொண்டு அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். மேலும் அவர் வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.990/- பற்றி கேட்ட போது அவர் முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அந்த தொகையை விசாரணைக்காக கைப்பற்றினேன். அவரிடம் அன்று பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் பட்டியலை ஆன்லைன் மூலம் பிரிண்ட் எடுத்து பெற்றும், அவரை விசாரித்து

வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. அவரது அருகே நின்றுகொண்டிருந்த திரு.சுப்பிரமணி, த/பெ.வெள்ளைச்சாமி என்பவரை விசாரித்தபோது அவர் தான் கரூர் மாநகராட்சி மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு தேவைப்படும் சான்றிதழ்களை முன்னிருந்து பெற்றுக்கொடுத்து வருவதாகவும், அதற்காக கமிஷன் தொகை பெற்றுக்கொள்வதாகவும். 17.07.2026 அன்று திரு.ரஞ்சித், த/பெ.சிவக்குமார் என்பவருக்கு சான்றிதழ் பெற இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்ய வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவர் திரு.ரஞ்சித் என்பவரின் உறுதிமொழி பத்திரத்துடன் வைத்திருந்த பணம் ரூ.3,600/- பற்றி அவரிடம் கேட்டபோது முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் மேற்படி தொகை ரூ.3600/- விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் அவர் கொண்டுவந்திருந்த திரு.ரஞ்சித் என்பவரின் உறுதி மொழி பத்திரம் அடங்கிய விண்ணப்பத்தையும் விசாணைக்காக கைப்பற்றினேன். அவரை விசாரித்து வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. மேலும் இந்த சோதனையின்போது, கரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி கரூர் வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், நிலஅளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்காக கரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஜீலை-2026 மாதத்தின் வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகலினை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் கரூர் வட்டாட்சியர் திரு.சண்முக பிரகாஷம் அவர்களிடம் கரூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கொடிநாள் நிதி இலக்கு பற்றி கேட்டபோது, அவர் தங்களது அலுவலகத்திற்கு ரூ.60,000/- இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும் 08.12.2025 முதல் தற்போது வரை ரூ.45,900/- ஆன்லைன் மூலம் வசூல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்திவிட்டதாகவும் மேற்படி தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலமே வசூல் செய்து வருவதாகவும், பணமாக வசூல் செய்யப்படுவதில்லை என்பதை தெரிவித்து அதன் விபரங்கள் அடங்கிய பட்டியலை பிரிண்ட் எடுத்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றினேன். திடீர் சோதனை நடவடிக்கை, அலுவலக ஆவணங்களுக்கோ, அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் ஆய்வாளர் அவர்களின் அறிவுரையின் பேரில் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட மடிக்கணினி மற்றும் பிரிண்டர் மூலம் மாலை 17.15 மணி முதல் 23.45 மணி வரை காவல் ஆய்வாளர் அவர்கள் சொல்லச் சொல்ல தலைமை காவலர் 303 திரு.ஷபி அஹமத் அவர்களால் கரூர் வட்டாட்சியர் அலுவலக மண்டல துணை வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்து தயார் செய்யப்பட்டது. அதில் நானும், செல்வி.M.கீர்த்தனா, உதவியாளர், மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகம், காவல் ஆய்வாளர் செல்வி.தங்கமணி, கரூர் வட்டாட்சியர் திரு.சண்முக பிரகாசம் ஆகியோர் பக்கதிற்கு பக்கமும், திரு.சிவதேவ், த/பெ.மாரப்பன், திரு.ராமலிங்கம்,

த/பெ.பாலுசாமி, திரு.சௌந்தரராஜன், த/பெ.வைரப்பெருமாள், திரு.ரமேஷ், த/பெ.செல்வராஜ், திருமதி.சுமதி, துணை வட்டாட்சியர் / வட்ட வழங்கல் அலுவலர், திரு.சிவமலர், த/பெ.சின்னதம்பி (நியாய விலைக்கடை விற்பனையாளர்), திரு.முருகேசன், வட்ட துணை ஆய்வாளர், திரு.லாவண்யா, நில ஆவண வரைவாளர், திரு.கோபால், நில அளவர், திரு.ஜெய்சங்கர், த/பெ.ஜெயராமன், திரு.செந்தமிழ்செல்வன், த/பெ.ஆறுமுகம், திரு.சுப்பிரமணி, த/பெ.வெள்ளைசாமி ஆகியோர் கடைசி பக்கமும் கையொப்பம் செய்தோம். மேற்படி திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,18,130/- மற்றும் மேற்குறிப்பிட்ட கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கின்றேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள Sd/- XXXXXXXXXX திருமதி.G.தமிழ்செல்வி, இளநிலை உதவியாளர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம், வெண்ணெய்மலை, கரூர் மாவட்டம். நாள்.18/07/2026.

Sir, Received the Computer typed complaint on 18.07.2026 at about 16.00 hrs, after getting suitable instructions form the superior officers and law officers of DVAC, Chennai, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.04/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and u/s 106 of BNSS 2023 at 16.30 hrs on 18.07.2026. Sd/- (XXXXXXXXXX) 18.07.2026 P.Thangamani, Inspector of Police, V & AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tmt.G.Tamilselvi, Junior Assistant, O/o the Assistant Commissioner of Labour (Enforcement), Vennaimalai, Karur district are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

18/7/2026

(P.Thangamani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.